**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதிகள் ஆஜர் இல்லை. 1ம் பிரதிவாதி ஆஜர். வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.536/2022

பி.வா.சா.1 பிரசாத்

**வாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:–**

1. இந்த வழக்கில் என்னுடைய மூத்த சகோதரிகள் என்றால் சரிதான். இந்த வழக்கில் 2வது பிரதிவாதி என்னுடைய தந்தை ஆவார். இந்த வழக்கை என்ன காரணத்திற்காக வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். எனக்கு 2011ல் திருமணமாகிவிட்டது.

2. மூத்த சகோதரிகளுக்கும் திருமணமாகிவிட்டது. என்னுடைய சொந்த ஊர் நாமக்கல் ஆகும். திருமணத்திற்கு பிறகு வேலைக்காக சென்னை சென்றுவிட்டேன். என் சொந்த ஊருக்கு தாய், தகப்பனை பார்ப்பதற்காக வருவேன். என்னுடைய மூத்த சகோதரிகள் தற்போது சென்னையில் வசித்து வருகிறார்கள்.

3. 03.11.2023அன்று என் தகப்பனார் இறந்துவிட்டார். அவர் அரசாங்க நிதியால் இயங்கும் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து சுமார் 2009–2010 வருடத்தில் ஓய்வு பெற்றவர் ஆவார். என்னுடைய தந்தை நாமக்கல் மற்றும் வாங்கலாம்வலசில் மாறிமாறி வசித்து வந்தார்.

வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.